மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. குண்டலம்பட்டி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று சொன்னேன். ஆரம்பிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அது உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் பம்ப் மூலமாக கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள், ஆனால். தர்மபுரி மாவட்டத்தில் சிறுபாசன திட்டத்தின் கீழ் நிறைய திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வறட்சி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, கசிவு நீர் தடுப்பு அணைகள் கட்டப்பட்டு வருகின்றன, அதன் மூலம் இன்று ஓரளவு பாசன வசதியை அதிகரித்து வருகிறோம். மேலும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, ஒகேனகல் பம்பிங் ஸ்கீம் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்த வறட்சி பகுதிகளுக்கு நீர் வருவதற்கு இது ஒரு சிறந்த திட்டம் என்ற காரணத்தால், இனிமேலாவது அதைப்பற்றி பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒகேனகல் திட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே மின்சார உற்பத்திக்கான முறையிலே கர்நாடக மாநிலமும், தமிழக மாநிலமும் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகின்றது, ஆகவே, அங்கே பாசன வசதியைப் பொறுத்த அளவிலே திட்டம் இன்னும் பரிசீலனையில் இல்லை.

கைலாபுரம் மருத்துவமனை.

*வினா எண் 155— திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா

வானூர் ஒன்றியத்தில் உள்ள கைலாபுரம் மருத்துவ மனையில் போதுமான பணியாட்களை அமர்த்தவும் மருந்து வகைகள் வழங்கவும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை,

திரு. மொ. பரமசிவம் : தலைவர் அவர்களே, இந்த ஆஸ்பத்திரியிலே போதுமான படுக்கை வசதியில்லை. அதனால், பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரிக்கு அனுப்பப்படுகிறார்கள். அதைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க மூன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, வானூர் ஒன்றியத்தில் தைலாபுரத்தில் நடைபெற்று வருவது அரசு மருத்துவமனை அல்ல. அது தென் ஆற்காடு மாவட்டம் கிளியானூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசரமாக வருகின்ற பிரசவங்களுக்கு படுக்கைகள் இருக்கிறதே தவிர, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

B. I. M. பட்டதாரிகள்.

*வினா எண் 156—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஆண்டிற்கு 15 B.I.M. பட்டதாரிகள் துணை மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்தது, பின்னர் 7 ஆகக் குறைக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆமெனில் அந்த எண்ணிக்கையை மீண்டும் உயர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 15 இந்திய மருததுவாகள அதாவது பி. ஐ. எம். பட்டதாரிகள் துணை மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு வந்தார்கள். குறைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் குறைக்கப்பட்டு விட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, அதை மீண்டும் பரிசீலித்து ''பீ இந்தியன், பை இந்தியன்'' என்ற கருத்திற்கேற்ப 15-க்கும் குறைவில்லாமல் அத்தகைய பட்டதாரிகளை துணை மருத்துவர்களாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.